சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

அசல் வழக்கு எண்.154/2022 - 18.12.2024

**வா.சா.1. பழனியப்பன். 1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட ஆவணத்தின் தேதி தெரியுமா என்றால் 12.05.2011. அந்த ஆவணத்தில் இரண்டு பக்கங்கள் கொண்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் பக்கத்திலும், கடைசி பக்கத்திலும் பிரதிவாதியும். சாட்சிகளும் ஒரே நேரத்தில்தான் போடப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம்தான் என்றால்சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையெழுத்து போட்டுள்ள மேல் வலது புறத்தில் கோடு போன்ற ஒரு புள்ளி உள்ளது என்றால் சரிதான். அதே போல் மேற்படி ஆவணத்தில் இரண்டாவது பக்கத்திலும் கோடு போன்ற ஒரு புள்ளி உள்ளது என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி வெளிநாட்டுக்கு அழைத்து செல்வதற்காக அலுவலகம் வைத்திருந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதி குடும்பத்திற்கும் எனக்கும் எந்த ஆண்டு பழக்கம் ஏற்பட்டது என்றால் 2011 ல் 2 வது மாதம். பிரதிவாதியை நேரடியாக நானே சென்று பழகினேனா என்றால் எனது நண்பர்கள் கண்ணன், கார்த்தி ஆகியோர்கள் மூலம் அறிமுகம் ஆனேன். கண்ணன், கார்த்தி ஆகியோர்கள் தற்போது ஊரில் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். நான் வெளிநாடு செல்வதற்காக பிரதிவாதியிடம் பணத்தை காசோலை மூலமாக கொடுத்தேனா அல்லது பணமாக கொடுத்தேனா என்றால் பணமாகதான் கொடுத்தேன். 2011 ஆம் ஆண்டு கொடுத்த பணத்திற்குதான் தற்பொழுது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2011 ல் 2 வது மாதத்தில் 1 ஆம் பிரதிவாதி தமிழ்நாட்டில் இருந்தாரா அல்லது சிங்கப்பூர் நாட்டில் இருந்தாரா என்றால் தமிழ்நாட்டில்தான் இருந்தார். நான் கொரடாச்சேரி, பிள்ளைத்தெருவில் பள்ளிக்கூடம் வைத்து நடத்திவருகிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ல் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தின் பேரில்தான் பணம் கொடுத்தேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் குறிப்பிட்டுள்ள சொத்தின் சர்வே எண்.92/5 ஒரு திருமண மண்டபம் இருந்தது

என்றால் சரிதான். அந்த திருமணமண்டபம் அந்த பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு வெண்ணவாசல் கிராமத்தில் ஒரு பெரிய வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிக்கு வெண்ணவாசல் கடைத்தெருவில் ஒரு பெரிய கடை மற்றும் காலி மனைகள் உள்ளது என்றால் சரிதான். விடயபுரம் என்ற கிராமத்தில் 1 ஆம் பிரதிவாதிக்கு 40 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் குறிப்பிட்டுள்ள பிரதிவாதிக்கு சொந்தமான சொத்துக்கள் அனைத்தும் எனக்கு பழக்கமான 2011 ஆம் ஆண்டிற்கு முன்பே உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் முதல் முதலில் பிரதிவாதிக்கு சொந்தமான திருமண மண்டபத்தில் தான் பள்ளி நடத்திவந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு சொந்தமான மண்டபத்தில் பள்ளி நடத்தி வந்த சமயத்தில் அங்குள்ள நாற்காலிகள், மரச்சாமான்கள் ரூ.5,00,000/- மதிப்புள்ள பொருட்களை எடுத்து சென்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ரூ.5,00,000/- மதிப்புள்ள பொருட்களை பிரதிவாதி வெளிநாட்டிலிருந்து வந்தவுடன் என்னிடம் கேட்டபோது நான் உங்களுக்கு ரூ.3,00,000/- அட்வான்ஸ் கொடுத்துள்ளேன் என்றும், மேற்கொண்டு பணம் கேட்கவேண்டாம் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பல ஆண்டுகளுக்கு பிறகு எப்படியாவது அந்த பணத்தை வசூல் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிப்பு அடைந்துள்ளது என்றும், அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் காலஅவகாசம் முடிந்த பிறகு வழக்கில் ஆவணங்களை உற்பத்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் இரண்டு பக்கங்களிலும் பிரதிவாதி போட்டுள்ள கையெழுத்து கணிணி மூலமாக ஸ்கேன் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள பிரதிவாதியின் கையெழுத்தை உண்மையான பிரதிவாதியின் கையெழுத்தோடு தடய ஆய்வாளர் ஆய்வுக்கு அனுப்பினால் உண்மை

**தெரியவரும் என்றால் அனுப்பலாம். உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் அடிப்படையிலும், பொய்யான வழக்கு மூலத்தின் அடிப்படையிலும், காலவாதி சட்டத்தால் பாதிப்படைந்த நிலையில் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதால், அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை - இல்லை</u>**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
DN: cn=M RAVICHANDRAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN
Date: 2025.01.08 13:10:43 +0530

Subordinate Judge,
Tiruvarur. (FAC)